சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம் - வாரப் பாடசாலை

பாடம் : சித்திரக் கலை

மூன்றாம் தவணை
முனறாம் வாரம்

தரம் : 06

தயாரித்தவர்: A.T.F. தில்ஷியா
மாவனல்லைக் கல்வி வலயம்.

தேர்ச்சி 2.0 : சுற்றாடலில் காணப்படும் பொருள்களை ஒருங்கிணைத்து சித்திரம் வரைவார்.

தேர்ச்சி மட்டம் 2.2 : எளிய கேத்திர கணித வடிவம் கொண்ட பொருள்களையும் தாவரப் பகுதிகளையும் இரேகைகளால் வரைவார்.

செயற்பாடு 2.2.1: “உருளை வடிவமொன்றும் தாவரப் பகுதிகளையும் இரேகைகளால் வரைவோம்.”

பாடவேளைகள் : 02

தர உள்ளீடு : உருளைவடிவப் பொருட்கள், அகன்ற மூன்று இலைகளையுடைய குறோட்டன் கிளையொன்று, 4B,6B வகையுடைய பென்சில்கள்,வரைதல் தாள்.

அடிப்படைக் கண்ணோட்டத்தைப் பற்றிய விளக்கத்தை அறிந்துள்ளீரா?

பொருளொன்றின் முப்பரிமாண இயல்பைப் பற்றி யாது கூறுவீர்?

உருளை வடிவினதும் தாவரப்பகுதியினதும் மேற்பரப்பின் வேறுபாடு பற்றி அறிவீரா?

போன்ற வினாக்களை கலந்துரையாடுவதன் மூலம் தலைப்பிற்கு பொருத்தமான ஓவியத்தை இரேகை மூலம் வரைதல். ஒளி நிழல் காட்டி முப்பரிமாணத் தன்மையை வெளிப்படுத்தும் விதத்தில் ஆக்கத்தை வரைதல்





